பற்றி தேர்வாணைக் கழகம் சில தெளிவுரைகளைக் கேட்டிருக்கிறது. அந்தத் தெளிவுரைகளை அரசு விரைவில் அனுப்ப இருக்கிறது. தேர்வும் விரைவில் நடைபெற இருக்கிறது.

[முற்பகல் 9-40].

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, படித்து வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரிகள் பற்றித் தெரிந்து கொள்ளத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். படித்துவிட்டு, 6, 7 ஆண்டுகளுக்கு மேலாக பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதற்கிடையே 10 (ஏ) (1) என்ற நிலையில் வேலை பார்ப்பவர்களுக்கும் வேலையினை இழந்து விடுகின்ற ஆபத்து இருக்கின்றது. ஆகவே இதற்குத் தனியாக சர்வீஸ் கமிஷன் மூலம் எடுப்பதற்கு பதிலாக சீனியாரிட்டி அடிப்படையிலே தேர்வு நடத்தி அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது 10 (ஏ) (1) விதியின் கீழ் வேலை செய்பவர்களுக்கு என்று ஒரு சிறப்பு தேர்வினை நடத்த வேண்டுமென்ற முயற்சியைப்பற்றி எடுத்துக் கூறி இருக்கிறேன். ஆனாலும் 10 (எ) (1) ஆசிரியர்களையும் நியமனம் செய்ய வேண்டிய நிலை நிர்வாகத்தினருக்கு இருக்கத்தான் செய்கிறது. சில வேளைகளில் இந்த மாதிரி தற்காலிக ஆசிரியர்களையும் நியமனம் செய்துதான் ஆக வேண்டி இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த 10 (எ) (1) என்ற நிலையில் பள்ளிகளில் ஆசிரியர்களை அமர்த்தும்போது சில தவறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் தவறுகளை நீக்குகின்ற வகையில் அரசே நியமனம் செய்வதற்கான உரிமையை எடுத்துக்கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி நியமனத்திலே தவறு நேர்ந்திருக்கிறது என்று சுட்டிக் காட்டப்படுமேயானால் அவைகளை நீக்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள்.

*வினா எண். 28—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா : பள்ளிகளில் புதிய கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுவதன் விளைவாகக் கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவது உண்மையா ?

1979 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உண்மை அல்ல.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பள்ளிகளில் இப்போது உருவாக்கப்பட்டிருக்கின்ற புதிய திட்டத்தின் அடிப்படையில் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற பேராசிரியர்கள் ஓரளவு வேலை இழப்பார்கள் என்ற அச்ச உணர்வு இருக்கின்ற காரணத்தால் அதைப் போக்குவதற்கு அரசு ஏதேனும் திட்டம் வகுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி ஒரு அச்சம் இருந்தது உண்மைதான். அதைப் போக்குகின்ற வகையிலேதான் சென்ற ஆண்டு இரண்டு தடவை சட்டசபையிலே அறிக்கைகள் சமர்ப்பித்து அரசு உறுதிமொழியை அவர்களுக்குத் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, திருச்சி ஹோலி க்ராஸ் காலேஜிலே சர்ப்ளஸ் ஆசிரியர்கள் என்ற நிலை வரக்கூடும் என்று எதிர்பார்த்து முன்கூட்டியே பல ஆசிரியர்களையும், ஆசிரியைகளையும் பல காரணங்கள் கூறி வேலையிலிருந்து நிறுத்தி இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட கேசிலே டிப்பார்ட்மென்ட் தலையிட்டு என்கொயரி பண்ணி திரு. வாசன் என்பவரை நிறுத்தியது தவறு என்று சொல்லி அவரை ரீஇன்ஸ்டேட் பண்ண வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டும் அந்த ஹோலி க்ராஸ் காலேஜ் நிர்வாகம் ரீஇன்ஸ்டேட் பண்ணுவதற்கு மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. இந்த நடவடிக்கை பற்றி அரசாங்கத்தினுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே இந்த உத்தரவினை அமல்படுத்துகின்ற வகையில் அந்தப் பள்ளிக்கு அளிக்கப்படுகின்ற கிராண்டை நிறுத்துவதற்கோ அல்லது வேறு ஏதாவது வகையிலோ நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு போட்ட அந்த உத்தரவை அமல் நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இப்படிக் கல்லூரி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்க்க மாணவர்கள், ஆசிரியர்கள் விகிதத்தை மாற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்களுக்கு பணி நீக்கம் தந்து விட்டதற்குப் பிறகு அவர்களுடைய பணியை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

என்கிற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற யோசனைகள் பல அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, புகுமுக வகுப்பு நீக்கப்படுகின்ற போது கிட்டத்தட்ட 70 சதவீதம் மாணவர்கள் கல்லூரிக்கு போக முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி இருக்கும் போது கல்லூரி ஆசிரியர்களுக்கு வேலை போகக் கூடிய நிலை ஏற்படாது என்று அமைச்சரவர்கள் கூறுவது சந்தேகத்திற் குரியதாகத்தான் இருக்கிறது. அதோடு வருகின்ற 19-ஆம் தேதி கல்லூரி ஆசிரியர்கள் தேர்வினைப் புறக்கணிக்கக் கூடிய அளவுக்கு ஏதோ சில இயக்கங்கள் நடத்தப் போவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையைப் போக்குவதற்கு அரசு என்ன நட வடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் தயவு செய்து கேள்வியைச் சுருக்க மாகப் போட வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே இந்த நிலையைப் போக்குகின்ற வகையில் ஜூனியர் காலேஜ் என்று ஆக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : புகுமுக வகுப்பை எடுப்பதால் ஆசிரியர்கள் வேலை இழப்பார்கள் என்ற அந்தக் கருத்து எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆகவே, வேலையை இழப்பார்கள் என்ற நிலையையொட்டித்தான் அந்த உறுதிமொழியை நாங்கள் தந்திருக்கிறோம். ஆகவே அமைச்ச ரைப்பற்றியோ அல்லது யாரைப் பற்றியுமோ சந்தேகப்பட இந்த இடத்தில் காரணம் இல்லை. ஜூனியர் காலேஜ் என்பது நாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிற ஒரு மிகப் பெரிய மாறுத லுக்கு முரணானது என்பதை மட்டும் உறுப்பினர் அவர்கட்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டம், அகில இந்திய முழுவதிலும் இருக் கிற எல்லா மாநிலங்களிலும் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தினை இன்றைக்கு எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நாம் நம்முடைய முயற்சிகளையெல்லாம் ஒரு முகப்படுத்தி இந்தத் திட்டம் வெற்றி பெறச் செய்யவேண்டுமே தவிர இதிலிருந்து பின்வாங்கி, கல்வித் துறையில் உள்ள பல்வேறு நிபுணர்கள், குழுவினர் யோசனையிலிருந்து மாறுபட்டு புதிய தொரு ஏற்பாட்டை ஏற்படுத்துவது என்பது கல்விக்கு, கல்வித் துறைக்கு ஆபத்தை விளைவிக்கும்.